ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2026.08.17 |

# இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2026 யூலை

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2026 யூலையில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துகாட்டுகின்றன

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2026 யூலையில் 55.0 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.** இம் முன்னேற்றத்திற்கு அனைத்து துணைச் சுட்டெண்களும் சாதகமாகப் பங்களித்திருந்தன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தித் துணைச் சுட்டெண்ணின் ஒட்டுமொத்த விரிவாக்கமானது உணவு மற்றும் குடிபான தயாரிப்புத் துறையினுள் ஏற்பட்ட வலுவான செயலாற்றத்தினால் முக்கியமாகத் தூண்டப்பட்டிருந்தது. தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான சாதகமான எதிர்பார்க்கைகளைப் பிரதிபலித்து, தொழில்நிலையும் கொள்வனவுகளின் இருப்பு துணைச்சுட்டெண்களும் யூலையில் விரிவடைந்து காணப்பட்டன. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் நீட்சியடைந்து காணப்பட்டு, தொடர்ச்சியான வழங்கல்-சங்கிலி அழுத்தங்களை சுட்டிக்காட்டியது

**கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு**


| மாறி | 2026 யூன் | 2026 யூலை | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **53.0** | **55.0** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 50.0 | 55.9 | + | நடுநிலையிலிருந்து அதிகரிக்கின்றது |
| உற்பத்தி | 52.0 | 54.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 50.5 | 51.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 56.6 | 51.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 61.6 | 61.5 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உலகளாவிய நிச்சயமற்றதன்மைகளுக்கு மத்தியில் தயாரிப்புத் துறை அடுத்த மூன்று மாதங்கள் தொடர்பில் சாதகமான எண்ணப்பாங்குடன் காணப்பட்ட அதேவேளை எச்சரிக்கை மிக்கதாகவிருந்தது.

**கொ.மு.சு**
**தயாரிப்பு**
**2026 யூலை**
**55.0**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகாரஎல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, அதே வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்1, 2026 ஒகத்து 17அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2026 யூலையில் 61.4 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் துரிதமடைந்த விரிவாக்கமொன்றை எடுத்துக்காட்டுகின்றது.**

பணிகள் துறைகள் முழுவதும் பரந்த அடிப்படையிலான மேம்படுதல்களால் ஆதரவளிக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் 2026 யூலையில் விரிவடைந்தன. இவ்விரிவாக்கமானது போக்குவரத்து, நிதியியல் அத்துடன் தொழில்சார் பணிகள் துணைத் துறைகளால் முதன்மையாக தூண்டப்பட்ட அதேவேளை, ஏனைய தனிப்பட்ட பணிகள் துணைத் துறையும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவுசெய்தது.

போக்குவரத்து மற்றும் தொழில்சார் பணிகள் துணைக் துறைகளால் முதன்மையாக முன்னணி வகித்து, புதிய வியாபாரங்கள் 2026 யூலையில் விரிவடைந்தது. நிதியியல் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகள் துணைச் துறைகளும் இவ்விரிவடைதலுக்கு பங்களித்தன.

புதிய ஆட்சேர்ப்புக்களாலும் அலுவலர் பதவி விலகுவதில் மெதுவடைவொன்றினாலும் ஆதரவளிக்கப்பட்டு, தொழில்நிலை 2026 யூலையில் அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலுள்ள பணி, முன்மைய மாதத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தது.


***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***

| மாறி | 2026 யூன் | 2026 யூலை | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **58.5** | **61.4** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய வியாபாரங்கள் | 62.5 | 60.2 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 54.0 | 52.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 50.0 | 51.2 | + | நடுநிலையிலிருந்து அதிகரிக்கின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 72.7 | 75.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

எதிர்பார்க்கப்படும் பொருளாதார மேம்படுதல்கள் மற்றும் எதிர்வரும் கண்டி எசல பெரஹரவிற்கான சுற்றுலா பயணிகளின் வருகைகளில் வலுவான வளர்ச்சி என்பவற்றினால் தூண்டப்பட்டு, எதிர்வருகின்ற காலாண்டுக்கான வியாபார நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் 2026 யூலையில் மேலும் வலுவடைந்தன. எனினும், பரந்தளவிலான உலகளாவிய நிச்சயமற்றதன்மைகள்

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2026 யூலை**
**61.4**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| யூரோ வலயம் | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2026 ஓகத்து 17 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.